
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 074 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 19 திங்கட்கிழமை (03.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## சட்டவிரோத ஆயுதங்கள் ஜே.வி.பியிடம் உள்ளன
### சாடுகிறார் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களை செயலிழக்கச் செய்ய வேண்டுமாயின் அதற்கான ஆரம்பப் பணியை மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பத்தரமுல்லை காரியாலயத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

16ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் தாராளம் வதந்திகளை நம்பாதீர்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போதுள்ள எரிபொருள் இருப்பு இன்று திங்கட்கிழமை மாத்திரமே போதுமானதாகவுள்ளது என்ற விநியோகஸ்தர்களின் கூற்றை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுத்துள்ளது.

நாட்டில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரி

15ஆம் பக்கம் பார்க்க

## கேரள கஞ்சாவுடன் மாதகலில் ஒருவர் கைது

(மாதகல்)

இளவாலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் 128 கிலோ கேரள கஞ்சாவுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்

02ஆம் பக்கம் பார்க்க

# பிரதமர் மோடியின் வருகை பலப்படுகிறது பாதுகாப்பு!

## தப்பியோடிய படையினரை கைது செய்யும் படலம் தீவிரம்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## சட்டவிரோத மணல் கடத்தல்
### சுட்டுப் பிடித்த பொலிஸார் ஒருவர் காயம் : ஒருவர் மாயம்

06ஆம் பக்கம் பார்க்க

## மே மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்
### முக்கிய அறிவிப்பு இவ்வாரம் வெளியாகலாம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் பூர்வாங்கமாகத் தீர்மானித்திருப்பதாகவும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் இவ்வாரத்தில் வெளி

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி சாட்சியங்கள் அழிக்கப்படலாம்
### உடன் பாதுகாப்பு வழங்குக சஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழிக்குப் பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் சாட்சியங்கள் அழிக்

15ஆம் பக்கம் பார்க்க

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆறு வாரங்களில் இறுதி அறிக்கை
### மார்ச் 27இல் வழக்கு விசாரணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதியில் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள்நிறைவு பெற்ற பின்னர் அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

16ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல்
## தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் போட்டி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்து தனது மான் சின்னத்தில் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் சார்பில் சட்டத்தரணி

15ஆம் பக்கம் பார்க்க

## பூநகரியில் தொடர் வழிப்பறி இருவரை மடக்கிப் பிடித்த மக்கள்

(கிளிநொச்சி)

பூநகரிப் பகுதியில் தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட இருவரை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சிபூநகரிப்பகுதியிலிருந்து வர்த்தக நடவடிக்கையை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த நபரிடம் வழிப்பறியில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

02ஆம் பக்கம் பார்க்க

## முப்படையின் வாகனங்கள் புகைப் பரிசோதனையில் தோல்வி

(கொழும்பு)

முப்படைகளின் முகாம்களில் ஆய்வு செய்யப்பட்ட ஆறாயிரம் வாகனங்களில், ஆயிரத்து 400 வாகனங்கள் முதல் சுற்றுப்புகைப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாக மோட்டார் வாகனத் துறையின் புகைப் பரிசோதனை பிரிவின் பொறியியலாளர் தாசுன் கமகே தெரிவித்துள்ளார்.


கரும்புகையால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் நோக்கில்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவற[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை காலமானார்



ஈழத்து மரபு வழி அறிஞர்களில் ஒருவரான பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 88.

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப்புலமை கொண்டவர்.

தனது ஆசிரியர்ப் பணி மூலம் சான்றாண்மைமிக்க மாணவர்களை உருவாக்கிய அவர், எழுதிய தமிழ் இலக்கிய கையேடு என்ற நூல் தமிழ் மாணவர்களுக்குப் பெரும் பயனைத் தந்தது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வாழ்விடமான சுதுமலையில் இடம்பெறும். (ந-7)

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா - இலங்கைக் கூட்டுப்பணிக்குழு

மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு கூட்டம் விரைவில் நடைபெறும் என பா.ஜ.கவின் மாநில தலைவர் அண்ணா மலை தெரிவித்துள்ளார்.

தங்கச்சிமடத்தில் நேற்று மூன்றாவது நாளாகவும் நடைபெற்ற மீனவர்களின் காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீனவர் பிரச்சினையை சட்டம் ஒழுங்காகவோ, எல்லைப் பிரச்சினையாகவோ அணுகாமல் மனிதாபிமான பிரச்சினையாக அணுக வேண்டும் என்றே இந்திய அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் மீனவ பிரச்சினை தொடர்பாக தாம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்குக் கடிதமொன்றை எழுதியதாகவும் குறித்த கடிதத்திற்குப் பதிலளித்த அவர் இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும் எனக் குறிப்பிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

### ஊடகவியலாளர் கீத் நொயார்

## கடத்தப்பட்ட விவகாரம் கைதானோருக்குப் பிணை

*(கொழும்பு)*

கடந்த 2008 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரிகள் இருவருக்கும் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நவகத்தேகம மற்றும் உலுக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 46 வயதுடைய இராணுவ புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையொன்றின் ஆசிரியராகப் பணியாற்றி வந்த ஊடகவியலாளர் கீத் நொயார், கடந்த 2008 மே மாதம் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இராணுவ வீரர்கள் உட்பட சந்தேக நபர்கள் சிலர் முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பூநகரியில்...

யாழ்ப்பாணத்திலிருந்து முகக்கவசத்துடன் சென்ற இருவர் பரந்தன் பூநகரி வீதியில் உள்ள தம்பிராய் பகுதியில் குறித்த வர்த்தகரின் தொலைபேசி மற்றும் பணப் பையைப் பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

அவ்வீதியால் பயணித்த மக்களுக்கு விடயத்தை பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த இருவரையும் துரத்திச் சென்ற பொது மக்கள் இருவரையும் மடக்கிப் பிடிக்க முயற்சித்த நிலையில் முட்கொம்பன் பகுதிக்குள் சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

முட்கொம்பன் காரியன் கட்டுக்குளம் பகுதியினூடாக தப்பிச் செல்ல முற்பட்ட குறித்த இருவரையும் பிரதேச மக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்து நையப்புடைத்த மக்கள் அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ந-7)

## கேரள கஞ்...

படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## முப்படையின்...

கிளீன் ஸ்ரீலங்காத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் முப்படை வாகனங்களின் ஆய்வுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாகனப்புகைப் பரிசோதனைப் பிரிவின் பத்து தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் இத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
/ - 076 636 3378
E.mail: Valampurii@yahoo.com

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17-08-1946
இறப்பு 03-03-2024

யாழ்.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சவுதிஅரேபியா, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அனுதினமும் அகம் விட்டகலா
நினைவின் வண்ணங்கள்
ஆண்டுகள் ஒன்று அகன்றாலும்
அகலாத எம் எண்ணங்கள்
ஆண்டுகள் நீளலாம் ஆனால்
உங்கள் நினைவுகள் நீங்காது

எங்களுக்கு பெருமை சேர்த்த எம் அப்பாவே
உங்கள் சிறப்பினால் நாம்
எல்லோரும் பெருமை அடைந்தோம்!

இன்று நீங்கள் எம்மோடு இல்லை
ஆனாலும் நீங்கள் காட்டிய பாதையில்தான்
பயணிக்கின்றோம் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

(C-2360)
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்தசுதாகர் உள்ளிட்ட

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதியை தாருங்கள்!

### ரவிகரன் எம்.பி சபையில் கோரிக்கை

**(கொழும்பு)**

**நீண்டகாலமாக விடுதலையின்றி சிறைகளில் வாடும் ஆனந்தசுதாகர் உள்ளிட்ட தமிழ் அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் பலரும் விடுதலையின்றி நீண்டகாலமாக சிறையில் வாடுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி, மருத நகரைச் சேர்ந்த ஆனந்தசுதாகர் என்பவர் கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்தசுதாகர் ஆயுள் தண்டனை கைதியாக கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது மனைவி கடந்த 2018 இல் உயிரிழந்தார். இந்நிலையில் இறுதிக்கிரியைக்கு கடும்பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டார்.

இறுதிக்கிரியையினை முடித்துக்கொண்டு சிறைச்சாலை பேருந்தில் ஆனந்தசுதாகர் ஏறச்சென்ற வேளை அவரது பிள்ளை தந்தையின் கையைப் பிடித்து தானும் சிறைச்சாலை பேருந்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனங்களையும் கலங்கவைத்தது.

நீதிஅமைச்சரே, நீதியைத் தாருங்கள். அவரோடு சேர்ந்து சிறையில் அரசியல் கைதிகளாக உள்ளவர்களுக்கும் விடுதலை தாருங்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)

## இலங்கையை வந்தடைந்த ஜப்பான் கப்பல்

(கொழும்பு)

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படைக்கு சொந்தமான 'ASAHI' என்ற கப்பல், கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.இந்தக் கப்பல் வழங்கல் மற்றும் சேவைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நேற்று முன்தினம் சனிக் கிழமை கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.மேலும் இந்தப் போர்க்கப்பலானது இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் குழுவினர்கள் கொழும்புப் பிரதேசத்தில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளங்களைப் பார்வையிட தீர்மானித்துள்ளனர். (நி-8)

## சரிவடையும் தேங்காய் விலை

(கொழும்பு)

கடந்த வாரத்தை விட தற்போது சந்தையில் தேங்காய் விலை படிப்படியாக குறைந்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.சராசரி அளவு தேங்காய் ஒன்றின் விலை கடந்த வாரம் சுமார் 250 ரூபாயாக காணப்பட்டது.

தற்போது 200 ரூபாய் முதல் 220 ரூபாய் வரை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எதிர்காலத்தில் தேங்காய் விலை குறித்து துல்லியமான அறிக்கையை வெளியிட முடியாது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## வெள்ளத்தில் சிக்கியிருந்த 35 பேர் மீட்பு

(கொழும்பு)

ஹிரிகட்டு ஓயாவின் நீர்மட்டம் திடீரென உயர்வடைந்த நிலையில் அப்பகுதியில் சிக்கியிருந்த 35 பேர், இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

கெமுனு கண்காணிப்புப் படையின் நன்பெரியல் முகாமில் நிறுவப்பட்டுள்ள அனர்த்த நிவாரணப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை குறித்த 35 பேரும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கொலன்னாவப் பகுதியிலிருந்து நன்பெரியல் பகுதிக்குச் சுற்றுலா சென்ற சுற்றுலாப் பயணிகள் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹிரிகட்டு ஓயாவின் நீர்மட்டம் உயருவதற்கு முன்னர் இராணுவத்தினர் விரைவான நடவடிக்கையினை மேற்கொண்டதன் விளைவாக பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற முடிந்ததாக இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)





225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2023 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

சுப பெத்தும் புலமைப்பரிசிலுக்கான தகைமையை பெறுவதற்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு www.sliclife.com ஊடாக இப்போது விண்ணப்பிக்க முடியும்.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லை.:.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு

| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் |
|---|---|---|
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் |

2025 மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 1377 அழையுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLIC LIFE

Company Registration Number - PB 286362

(C-082)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசிபலன்கள்-2025

## குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது -களத்திர ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி அஷ்டம ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - தொழில் ஸ்தானத்தில் குரு - இலாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04.03.2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09.03.2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14.03.2025 அன்று சூரிய பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18.03.2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30.03. 2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** துணிச்சலாக எதையும் செய்து வெற்றி பெறும் சிம்ம இராசியினரே! இந்த மாதம் வீண் அலைச்சல் காரிய தடை ஆகியவை அகலும். சுக்கிரனால் தடை நீங்கி காரியங்கள் நடந்து முடியும். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். தேவையான வசதிகள் உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். உடல்சோர்வும், மனக் குழப்பமும் நீங்கும். செலவு கட்டுக்குள் இருக்கும்.

தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும். கூட்டு தொழிலில் இருப்பவர்கள் கவனமாக எதையும் செய்வது நன்மையைத் தரும். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம் முடிவில் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். சக ஊழியர்கள் ஆதரவும் இருக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டு பேசுவது நல்லது. குடும்ப விடயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதை தவிர்ப்பது நன்மை தரும். குழந்தைகள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர், நண்பர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது. பெண்களுக்கு உடல் சோர்வும் திடீர் கவலைகளும் ஏற்பட்டு நீங்கும். பணவரத்து திருப்தி தரும். மதிப்பும், மரியாதையும் கூடும்.

கலைத்துறையினருக்கு வாகனங்களை உபயோகப்படுத்தும் போது க்வனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகுமுறையை கையாள்வது அவசியம். பணவரத்து அதிகரிக்கும். காரிய தடங்கல்கள் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும்.




அரசியல்துறையினருக்கு காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். கவனமாக செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வீர்கள். சக மாணவர்கள் ஆதரவும் இருக்கும்.

**மகம்:** உற்றார் உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை குறையும். உடல் ஆரோக்கியத்தில் உண்டாகக் கூடிய பாதிப்புகளால் மருத்துவ செலவுகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியற்ற நிலை ஏற்படும்.

**பூரம்:** எதிர்பார்க்கும் பதவி உயர்வுகளும் தாமதப்படும். தேவையற்ற பயணங்களாலும் அலைச்சல்கள் அதிகரிக்கும். பண வரவில் நெருக்கடிகள் ஏற்படும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் நிறைய போட்டிகளை சமாளிக்க வேண்டி வரும். அனைவரையும் அனுசரித்து செல்ல பழகிக் கொள்வது, பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது மிகவும் நல்லது.

**உத்திரம் 1 ஆம் பாதம்:**
எந்தவொரு காரியத்திலும் எதிர் நீச்சல் போட்டே முன்னேற வேண்டியிருக்கும். குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை ஏற்படும். திருமண சுப முயற்சிகளில் தாமத நிலை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் பணியில் கவனமுடன் செயற்படவும். எனினும் உங்கள் சமயோஜித புத்தியால் அனைத்தையும் சமாளிப்பீர்கள்.


**பரிகாரம்:** பிரதோஷ காலத்தில் சிவனை வணங்குவதன் மூலம் எல்லா நன்மைகளும் உண்டாகும். தடைகள் நீங்கும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய்

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 2, 3, 29, 30

**அதிஷ்ட தினங்கள்:** 22, 23

## புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும்



**கிரகநிலை** - இராசியில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி -களத்திர ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் - பாக்கிய ஸ்தானத்தில் குரு -தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 04.03.2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09.03.2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14.03.2025 அன்று சூரிய பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18.03.2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30.03.2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** வாக்கு நாணயம் தவறாமலும் உண்மைக்காக பாடுபடும் குணமும் உடைய கன்னி இராசியினரே! இந்த மாதம் சுணங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறுவதோடு மட்டுமல்லாமல் மனதில் புது திட்டங்கள் உருவாகும். புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும். வீண் பகை, மன சஞ்சலம், தேவையற்ற செலவு ஆகியன அகலும். மன சஞ்சலம் தீரும். பகைகள் தொல்லை தராமல் இருக்கும்.

வியாபாரம், தொழில் மூலம் உண்டாகும் செலவுகள் குறையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். ஆனால் அவர்களிடம் திறமையாக பேசி தக்க வைத்துக் கொள்வது நல்லது. வியாபாரம் தொழில் போன்றவற்றை விரிவாக்கம் செய்ய புது திட்டங்களை பற்றி ஆலோசனை செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புது தொழிலில் முதலீடு செய்யும் போது கவனம் தேவை.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவது நல்லது. நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் கூறும் கருத்துகளுக்கு எதிர்த்து பேசுவதை விட்டுவிட்டு நிதானமாக உங்கள் கருத்தை சொல்வது நன்மை தரும்.

பெண்களுக்கு கடன் பிரச்சினைகள் குறையும். புதிய எண்ணங்கள் உண்டாகும். புது நபர்களின் நட்பும் கிடைக்கலாம். கலைத்துறையினருக்கு இருந்த பிரச்சினைகள் நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். இஷ்ட தெய்வத்தை வழிபட கவலை குறையும். ஆன்மீக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மன நிம்மதி ஏற்படும்.

அரசியல்துறையினருக்கு உழைப்




பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதிற்கு சந்தோஷமான காரியங்கள் நடக்கும். இலாபம் அதிகரிக்கும். பணியாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம்.

மாணவர்கள் வீண் விவாதங்களை தவிர்த்து கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:** சற்று ஏற்ற இறக்கமான பலன்களைப் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தைவிட குறைவாக கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் தோன்றினாலும் பெரிய கெடுதிகள் ஏற்படாது. எல்லாம் இருந்தும் அனுபவிக்க முடியாதபடி சுகவாழ்வு, சொகுசு வாழ்வில் பாதிப்பு உண்டாகும்.

**அஸ்தம்:** பொருளாதார நிலையில் சில இடையூறுகள் உண்டாகும். அசையும் அசையா சொத்துகளால் சிறு சிறு விரயங்கள் ஏற்படும். வீடு, மனை, வண்டி வாகனங்களால் சுப செலவுகள் ஏற்படும். அடிக்கடி தூர பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பும் உண்டாகும்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:** சற்று அலைச்சல்கள், நெருக்கடிகள் உண்டாகும். சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப் பின் வெற்றி கிட்டும். தொழில் பொருளாதார ரீதியாக மேன்மை, குடும்பத்தில் திருமண சுப காரியங்கள் கைகூடும் வாய்ப்பு, கணவன் மனைவியிடையே ஒற்றுமை, புத்திர சிறப்பு எல்லாம் உண்டாகும்.

**பரிகாரம்:** விஷ்ணு சகஸ்ர நாமம் பாராயணம் செய்து வர எதிர்ப்புகள் அகலும். செல்வம் சேரும். மன நிம்மதி உண்டாகும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 4, 5

**அதிஷ்ட தினங்கள்:** 24, 25, 26

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளர்வடைந்த பகிஷ்கரிப்பு

## போதனாவின் சேவைகள் வழமைக்கு



(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் நலன் சார்ந்து தமது பகிஷ்கரிப்பை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து இருந்தமையால் சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தனர்.

இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகளின் தாய்ச் சங்கத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலைக் கிளைச் சங்கத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கத்தினையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் நேற்று முன்தினம் முதல் வழமைக்கு திரும்பியுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நோயாளிகளின் பாதுகாப்பை முன்னிறுத்தி, கலந்துரையாடலின் போது பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒரு வாரத்திற்குள் நடைமுறைப்படுத்த தவறும் பட்சத்தில் முன்னறிவிப்பின்றி முழு அளவில் எமது தொழில் சங்க நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8-33)

# பாதாளக் குழுக்களுக்கு ஆப்பு

## தீவிரமாக செயற்படும் 'இன்ரபோல்'

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று இலங்கையில் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் கொலைகளை நடத்தி வரும் 293 பாதாள உலக குழு உறுப்பினர்களுக்கு சர்வதேச பொலிஸார் இதுவரை சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு 199 சிவப்பு அறிவிப்புகள், 90 நீல அறிவிப்புகள் மற்றும் 4 மஞ்சள் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பொலிஸாருக்கு சர்வதேச ஆதரவு கிடைத்துள்ளது.

மேலும், சமீபத்திய நாட்களில் வெளிநாட்டில் இருந்த 19 குற்றவாளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த செயல்முறை தீவிரமடைவதால் குற்றவாளிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். (நி-8)

# வீதிகளில் கட்டாக்காலி

## மாடுகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(குருமன்காடு)

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதி மற்றும் ஏ9 வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன் இதற்கு நகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறிப்பாக நகரைச்சூழ பல பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் அதிகம் காணப்படுகின்றது. இந்நிலையில் இவ் வீதிகளினை பயன்படுத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இக் கட்டாக்காலி மாடுகளால் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.அத்துடன், இக்கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்குள்ளாகும் நிலையும் அண்மைய நாட்களாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இது குறித்து கால்நடைகளை பராமரிப்பாளர்கள் கவனம் எடுக்க வேண்டும் அல்லது வவுனியா நகரசபையானது கால்நடைகள் பராமரிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா நகரசபை செயலாளர் பாலகிருபனிடம் கேட்கப்பட்ட போது,

தொடர்ச்சியாக கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வருட ஆரம்பத்திலும் நகரில் கட்டாக்காலியாக திரிந்த 70 மாடுகள் பிடிக்கப்பட்டதுடன் அம்மாடுகளின் உரிமையாளர்களிற்கு தண்டப்பணமும் அறவிடப்பட்டிருந்தது என தெரிவித்தார். (6-8-250)

# வவுனியா குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக ஜெயதிலக்க

(குருமன்காடு)

ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத் திலக்க வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடந்த வெள்ளிகிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல பதவி நிலைகளை வகித்து வந்த சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமைகளைப் பொறுப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# உள்ளூராட்சி தேர்தல்; இவ்வார இறுதிக்குள் முடிவு

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான திகதி இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அத்தோடு 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களுக்காக செலுத்தப் பட்ட கட்டுப்பணத்தை விரைவில் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட துணை மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (நி-8)

# இராசிபலன்

03.03.2025
மாசி 19, திங்கட்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.42 மணிவரை

ரேவதி முற்பகல் 10.42 மணிவரை
சுபநேரம் 12.27-1.57 மணிவரை
இராகுகாலம் 7.57-9.27 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்.

வளவன்




வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், போசன சுகமுண்டு.




செய்தொழில் மேன்மையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகமான நாள்.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எடுத்த காரிங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




உறவினர் பகை மாறும், மறைமுகப் போட்டிகளை எளிதில் சமாளிப்பீர்கள், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், போசன சுகமுண்டு.




சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும், சுதந்திரமாகச் செயற்படும் நாள், காரிய அனுகூல முண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், புதிய நபர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.




மனதில் இடம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள் பிரயாண பயமுண்டு.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

வாழ்வதன் பொருள் இடைவிடாது முயற்சி செய்தல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுக்களின் உயிர்காத்த பொலிஸாருக்கு சிவசேனை அமைப்பு பாராட்டு



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இறைச்சிக்காகக் கொண்டு வரப்பட்ட மாடுகளை மீட்ட சாவகச்சேரிப் பொலிஸாருக்கு சிவசேனை அமைப்பு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை லொறி ஒன்றில் சட்டவிரோதமாக இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்பட்ட 18 மாடுகளை சாவகச்சேரி பொலிஸார் மீட்டெடுத்த சம்பவம் தொடர்பில் சிவசேனை அமைப்பினால் அறிக்கை வெளியிடப்பட்டது. அவ் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில், இந்து மதத்தினால் பூசிக்கப்படும் மாடுகளை இறைச்சிக்காக, சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற வேளை சாவகச்சேரிப் பொலிஸார் நேர்மையுடன் செயற்பட்டு குற்றவாளிகளை கைது செய்ததுடன் 18 மாடுகளின் உயிர்களையும் காப்பாற்றியுள்ளனர்.

இந்த நல்ல காரியத்தைச் செய்த சாவகச்சேரிப் பொலிஸாருக்கு இந்து மத மக்கள் சார்பாக சிவசேனை அமைப்பு தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் மீண்டும் தெரிவித்துக் கொள்வதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக மாடுகள் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்படுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-6-8)





தமிழியல் ஆய்வு நடுவகம், நல்லூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய "தமிழ் இலக்கண மரபின் செல்நெறி" என்னும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு நேற்று முன்தினம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நல்லூர்ப்பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் கு.றஜீபன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)



கரப்பந்தாட்ட தொழில்நுட்ப மற்றும் பயிற்றுநருக்கான volleyball Developmet Commission member வட மாகாண இணைப்பாளராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் த.கருணாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மத்திய ஆசிய (CAVA) கரப்பந்தாட்ட சங்க செயலாளரும் மற்றும் இலங்கை கரப்பந்தாட்ட சங்க செயலாளரும் இணைந்து குறித்த நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தனர்.

(படம்: கனகராஜா)

# டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் நேற்று காலை மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தினை பொலிஸார் வழிமறித்தனர்.

பொலிஸாரின் கட்டளையை மீறி டிப்பர் பயணித்த நிலையில் டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் தப்பித்து ஓடிய நிலையில் இன்னொரு நபர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-33-60)

# ரட்ண சபாபதி சுழல் கிண்ணம் ஹாட்லிக் கல்லூரி வசமானது

(யாழ்ப்பாணம்)

ரட்ணசபாபதி சுழல் கிண்ணத்தை இரண்டாவது முறையாகவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியினர் கைப்பற்றினர்.

நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 20 வயதிற்கு உட்பட்ட ரட்ணசபாபதி சுழல் கிண்ணத்திற்கான போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.

இரண்டாவது பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி வீரர் ஒருவரினால் அடிக்கப்பட்ட பந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பின் கள வீரரை மேலாக தாண்டிச் செல்ல அதனை நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் தருண் லாவகமாக கோலாக்கி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

ஆனால் சற்றும் சளைக்காமல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி வீரர்கள் போராடினர். இதனால் ஆட்டம் நிறைவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கு தண்டனை உதை கிடைத்தது.

இதனை சரியாகப் பயன்படுத்திய அவ்வணி வீரர் பவநீதன் கோலாக்கி கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக்கட்டத்தை எட்டியது.

அதன் பின்னர் இரு அணிகளாலும் மேலதிக கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ரட்ணசபாபதி சுழல் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இதில் சிறந்த ஆட்ட நாயகனாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி வீரர் பவநீதன் தெரிவு செய்யப்பட்டார். (6-8-90)



# 1600 போதை மாத்திரைகளுடன் சுதுமலையில் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் 1600 போதை மாத்திரைகளுடன் இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களை வழிமறித்து சோதனையிட்ட போது, 1600 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டது.

அதனை அடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரையும் பொலிஸார் கைது செய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவில் போர் நிறுத்தம்! ஒப்புதல் அளித்தது இஸ்ரேல்!



(ஜெருசலேம்)

**ரம்ழான் பண்டிகைக் காலத்தில் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளது.**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள், மேற்காசிய நாடான இஸ்ரேலுக்குள் நுழைந்து, கடந்த 2023 ஒக்டோபரில் தாக்குதல் நடத்தினர்.

இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 200 பேரை பிணைக்கைதிகளாக கடத்திச் சென்றனர். இதற்கு பதிலடியாக கடந்த 15 மாதங்களாக இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதலில், காசாவில் 48,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா மற்றும் ஐ.நா., வின் முயற்சியால், இரு தரப்பிற்கும் இடையே கடந்த ஜனவரி 19 முதல் முதற்கட்டப் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது.


போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் அரசும், அந்நாட்டு பிணைக் கைதிகளை ஹமாஸ் தரப்பும் விடுவித்து வருகின்றன.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் விரைவில் முடிவடைய உள்ளது.

இந்நிலையில், ரம்ழான் பண்டிகை காலத்தில் காசாவில் தற்காலிக போர்நிறுத்தம் செய்வதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தூதர் ஸ்டீவ் விட்காப் முன்மொழிவுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. ஏற்கனவே போர்நிறுத்தத்தின் முதல் கட்டம் காலாவதியாகும் தருவாயில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

'மத விடுமுறை நாட்களில் பதற்றங்களைத் தணிப்பதே தற்காலிக போர்நிறுத்தத்தின் நோக்கமாகும். ரம்ழான் தொடங்கும் போது, உலகெங்கிலும் உள்ள பலர் பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதத்துடன் மாதத்தை வரவேற்கின்றார்கள். இதனால் தற்காலிக போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது' என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி-8)

## போப் பிரான்சிஸின் உடல் நிலையில் முன்னேற்றம்



(வத்திக்கான்)

இரட்டை நிமோனியாவுடன் இரண்டு வாரங்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள புனித போப் பிரான்சிஸ், மற்றொரு அமைதியான இரவைக் கழித்ததாகவும் தற்போது ஓய்வெடுத்து வருவதாகவும் வத்திக்கான் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

88 வயதான பிரான்சிஸ், பெப்ரவரி 14 அன்று ரோமின் ஜெமெல்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முதலில் மூச்சுக்குழாய் ஒவ்வாமையால் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் அது மிகவும் தீவிரமான ஒன்றாக வளர்ந்தது கண்டறியப்பட்டது.

· இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை போப்பின் உடல்நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்பட்டது.

வத்திக்கானின் மனித மேம்பாட்டு அலுவலகத்தின் தலைவரான கார்டினல் மைக்கேல் செர்னி, இத்தாலியின் லா ஸ்டாம்பா செய்தித்தாளுக்கு அளித்த பேட்டியில், பிரான்சிஸின் உடல் நிலை நாம் எதிர்பார்ப்பதை விட மெதுவாக குணமடைந்து வருவதாக குறிப்பிட்டார். (நி-8)

## சீன பல்கலைக்கழகங்களுக்கு தடை விதித்தது தாய்வான்



(தாய்பே)

எல்லைப்பகுதியில் சீனாவின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் சீன பல்கலைக் கழகங்களுக்கு தாய்வான் அரசு தடை விதித்துள்ளது.

தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா துடித்து வருகிறது. இதற்காக தாய்வான் அருகே அடிக்கடி போர்ப்பயிற்சி மற்றும் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பி போர்ப் பதற்றத்தைத் தூண்டுகின்றது.

எல்லைப்பகுதியில் சீனாவின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம்சாட்டி வருகிறது.

இந்நிலையில், சீனாவைச் சேர்ந்த பீஹாங் பல்கலைக் கழகம், பீஜிங் தொழில்நுட்ப நிறுவனம், நான்ஜிங் விமானவியல் மற்றும் விண்வெளி பல்கலைக்கழகம் உள்ளிட்ட 7 பல்கலைக் கழகங்களுக்கு தாய்வான் தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக, தாய்வான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே சீன பல்கலைக் கழகங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே அதனுடன் தாய்வானில் உள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் எவ்வித கல்வி நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என தெரிவித்துள்ளது. (நி-8)

## திருமண வயதெல்லையை குறைக்க சீனா திட்டம்

(பீஜிங்)

குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்காக திருமண வயதை 18 ஆகக் குறைக்க சீன அரசு தீர்மானித்துள்ளது.

சீனாவில் தற்போது ஆண்களின் திருமண வயது 22 ஆகவும் பெண்களின் திருமண வயது 20 ஆகவும் உள்ளது இந்நிலையில், இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ளவும், குழந்தைகளை பெற்றுக் கொள்ளவும் ஊக்குவிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தை பராமரிப்பு மற்றும் திருமணச் செலவுகளைக் கருத்தில் கொண்டு பெரும்பாலான சீனர்கள் தற்போது குழந்தை பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவிலகும் மாணவர்களின்

## எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை

(குருமன்காடு)

**பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**



கடந்த வாரம் வவுனியாவிற்கு வருகை தந்த அமைச்சர் வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லங்களை பார்வையிட்டு சென்றிருந்த நிலையில் பத்திரிகையாளர் அமைச்சரிடம் இது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் என்பவற்றுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 500 மில்லியன் ரூபாய் இதன் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மனிதவளத்தை மேம்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அபிவிருத்திக்காகவும் அவர்களுக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் மாணவர்களுக்கான 6000 ரூபாய் கொடுப்பனவு, சப்பாத்து வவுச்சர், பாடநூல், சீருடை என்பன வழங்கப்பட்டுள்ளன.

இனி பாடசாலையில் இருந்து பொருளாதார சுமை காரணமாக இடைவிலக முடியாத வகையில் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமருடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இடைவிலகலுக்கு பின் சிறுவயது திருமணங்கள், சிறு வயது விவாகரத்து தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களுக் கான ஒரு கல்வியை வழங்குவது தொர்பிலும் ஆலோசித்து வருகின்றோம்எனத்தெரிவித்தார். (6-8-250)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 180 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1400 | 1000-1100 | 1300 |
| தக்காளி | 100 | 80 | 100 | 80-100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 250 | 200 |
| கோவா | 300 | 280 | 300 | 280 | 400 |
| கரட் | 850 | 850-900 | 800 | 900 | 1000 |
| பூசணி | 120 | 140 | 120 | 80 | 200 |
| புடோல் | 150 | 150 | 180 | 130 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 180 | 155 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 350 | 500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 300 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 250 | 200-250 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 200 | 130 | 200 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2400 | 1500-2000 | 2400 |
| போஞ்சி | 150 | 200 | 200 | 120 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | 100 | 150 |
| கீரை – 1 பிடி | 100 | 70 | 60 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 260 | 200 | 150-250 | 200-280 |
| இராசவள்ளி | 500 | 400 | 500 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 100 | 50-120 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 130 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 70 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3305

Search for people, places and things

### சிந்துஜன்

நான் என்ன போஸ்ட் போட்டாலும் வேலை மெனக்கிட்டு எனக்காக லைக் போடுற அந்த நல்ல மனசுக்கு



ஆண்டவன் எந்த குறையும் வைக்காமல் நல்லா இருக்கணும்

### கனுசிகா

கொசு பட் வாங்கிய பிறகு



அந்த மூளையில எத்தனை கொசு இருக்கு என்று பாரு, இந்த மூக்குல எத்தனை கொசு இருக்கு என்று பாரு.. அய்யோ இப்போ நான் ஏதாச்சும் கொசுவ அடிச்சே ஆகனுமே

### கிஷோ

sunday தானே 10 மணிக்கு எழுந்திரிக்கலாம் என்று நல்லா தூங்கிட்டு இருந்தேன். காலையில 7 மணிக்கு ஒருத்தன் போன் பண்ணி சும்மா தான் பண்ணினேன் சாரி என்று சொல்லிற்று போனை வச்சிட்டான்



இப்ப அந்த தூக்கத்தை காணோம்

### சைந்தவி

என் கம்பெனியை பொறுத்தவரை இந்த கம்பனியில் வேலை செய்து சமாளிச்சிட்டோம் என்றால்



வேறு எந்த கம்பெனிக்கு வேலைக்கு போனாலும் பொளச்சுக்கலாம்

### தாரணி

நரியின் புத்தி கொஞ்சமாவது நமக்கு இருக்க வேண்டும்



பிறருக்கு குழி பறிக்க அல்ல, அடுத்தவர் பறிக்கும் குழியில் விழாமல் இருக்க...

### கிருஷ்ணா

ஞாயிறு காலையில எவ்வளவு நேரம் தூங்குகிறோம் என்பதை



சமையலறையில் இருந்து வரும் கறிக்குழம்பின் வாசமே தீர்மானிக்கிறது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute Of Junior

Spoken & Written Elocution

பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 60 மாணவர்களை பாராட்டுகின்றோம்




வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்: யாழ்ப்பாணம்

ஆசிரியர்: திருமதி. பிரகாஷ் சுமிதா

- Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் ( Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
- English Classes (ஆங்கில வகுப்புக்கள்)

இல.928, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630


# இரட்டை நிலைப்பாட்டில் மனித உரிமைகள் பேரவை

## ஜெனிவா தீர்மானம் குறித்து அநுர அரசை எச்சரித்த ரணில்

(கொழும்பு)

மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறலை மையப்படுத்திய தீர்மானம் ஒன்றை இலங்கைக்கு எதிராக முன்வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய தீர்மானத்தை எதிர்கொள்வதாயின் அரசாங்கம் இன்றிலிருந்தே தொலை நோக்குடன் செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

தொலைநோக்குடன் அரசு செயற்பட தாமதித்தால் பொருளாதார ரீதியில் மாத்திரமின்றி பல வழிகளிலும் ஏற்படக் கூடிய பேராபத்துக்களை தவிர்க்க முடியாது.

இலங்கை விடயத்தில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை இரட்டை நிலைப்பாட்டில் இருந்து செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே இலங்கை மீதான ஜெனிவா அழுத்தங்கள் எதிர்வரும் காலங்களிலும் தொடரும்.

ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கம் உட்பட நாட்டின் எதிர்க்கட்சிகள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-8)

# பிறப்பு வீதத்தில் சரிவு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் கர்ப்பிணித் தாய்மார்களைப் பதிவு செய்யும் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அரசாங்க குடும்ப சுகாதார சேவை சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பிறப்பு வீதமும் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின்
# பொன்னியின் செல்வன்
715
### காவியத் தொடர் பாகம் - III





தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு கணமும் தங்களை நான் இங்கு வைத்திருக்க விரும்பவில்லை. இந்தக் கணமே தாங்கள் புறப்படலாம். கால்வாயில் படகு ஆயத்தமாய்க் காத்திருக்கிறது!" என்றார். "எங்கே போவதற்கு?"

அது தாங்கள் தீர்மானிக்க வேண்டிய காரியம். தங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்த இருவரும் படகுடன் தங்களை அழைத்துப் போக வந்திருக்கிறார்கள்.

இளவரசன் சிறிது தயங்கினான். ஆச்சாரிய பிக்குவின் முகத்தில் மர்மமான புன்னகை பொலிவதைக் கண்டு, "இதில் இன்னும் ஏதேனும் சூழ்ச்சி இருக்கக்கூடுமோ?" என்று வியந்தான். "அவர்கள் இருவருமே திரும்ப வந்திருக்கிறார்களா? எதற்காக என்று சொல்லவில்லையா?"

"சொன்னார்கள். இந்த விஹாரத்திலிருந்து ஒரு நாழிகை தூரத்தில் கால்வாயின் கரையில் நந்தி மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் தங்களைப் பார்ப்பதற்காக இரண்டு பெண்மணிகள் வந்து காத்திருக்கிறார்களாம்."

இளவரசன் அவசரமாகக் கட்டிலிலிருந்து இறங்கினான். "ஆச்சாரியரே! உடனே படகுக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்! இவ்வளவு தாமதம் ஆகிவிட்டதே" என்றான். பிக்கு இளவரசனைக் கையினால் தாங்கிக் கொண்டு கால் வாய்க்கரை வரையில் சென்றார். ஆனால் இளவரசனுடைய நடையில் நாலு நாளைக்கு மேலாகக் கடுஞ் சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்ததின் அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஏறு போல் நடந்து பொன்னியின் செல்வன் கம்பீரமாக வருவதைக் கண்டு சேந்தன் அமுதன், பூங்குழலி இருவருடைய முகங்களும் மலர்ந்தன.

அருள்மொழிவர்மன் படகில் ஏறி உட்கார்ந்ததும் பிக்கு அவனைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு ஏதேனும் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதை இந்தச் சூடாமணி விஹாரத்துப் பிக்குக்கள் அனைவரும் பெரும் பாக்கியமாகக் கருதுவோம். தாங்கள் திரும்பவும் இங்கு வந்து ஒருவாரம் தங்கி உடல் வலிவு பெற்றுப் போவது நலம்!" என்றார். "குருதேவரே! நான் திரும்பி வருவேன் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. இல்லாவிடில் இவ்வாறு மற்ற பிக்குக்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அவசரமாகப் புறப்பட்டிருக்க மாட்டேன்!" என்றான் இளவரசன்.

படகு நகரத் தொடங்கியதும் சேந்தன், பூங்குழலி இருவரையும் மாறி மாறிப் பார்த்து, "இக்கால்வாயின் வழியாக நீங்கள் என்னை அழைத்துக்கொண்டு வந்த போது நீங்கள் தேவலோகத்தவர்கள் என்றும், சொர்க்கத்துக்கு என்னை அழைத்துப் போகிறீர்கள் என்றும் எண்ணியிருந்தேன். என்னை ஏமாற்றி விட்டீர்கள். சந்நியாசி மடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள்! போனால் போகட்டும் கடலில் நீந்திக் கை சளைத்து நினைவிழந்து போனதிலிருந்து நடந்ததையெல்லாம் உங்களிடம் கேட்க வேண்டும். அதற்கு முன்னால், நந்தி மண்டபத்தில் எனக்காகக் காத்திருப்பவர்கள் யார் என்று சொல்லுங்கள்" என்றான் இளவரசன். இருவரையும் பார்த்து அருள்மொழிவர்மன் கேட்ட போதிலும், பூங்குழலிவாய் திறக்கவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## ஈவது விலக்கேல்



(நேற்றைய தொடர்ச்சி...)

ஆனால் நான் பதில் சொல்லிவிட்டால் நீர் இந்த அரண்மனையில் மன்னர் முதல் மற்றவர்களுக்கெல்லாம் அடிமை வேலை செய்ய வேண்டும் என்று கூறினார்."

விகடகவியும் அதற்கு ஒப்புக் கொண்டு தனது கேள்வியைக் கேட்கத் தயாரானார். "அரசவைக் கவிஞரே! இந்த உலகத்தில் எளிதில் அழியக் கூடியது எது? அழியாதது எது? இதுவே எமது கேள்விகள்.

அரசவைக்கவிஞர் தனக்குள்ளேயே ஒருமுறை கேள்வியைத் திருப்பிக் கேட்டுக் கொண்டார். "எளிதில் அழியக்கூடியது? எளிதில் அழியாதது?" கேள்விக்கான விடையைக் கண்டுப்பிடிக்க முடியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தார். மன்னருக்கும், மற்றவர்களுக்கும் கூட கேள்விக்கான பதிலைச் சரிவர கண்டு பிடிக்க முடியவில்லை. எல்லோருமே குழப்பத்தில் ஆழ்ந்தார்கள். கடைசியில் விகடகவியே கேள்விக்கான விடையைச் சொல்லலானார்.

'அரசே! இந்த உலகத்தில் ஆணவம் கொண்ட புகழ் உடனே அழிந்து விடும். அடக்கமாக இருக்கின்ற புகழ் என்றுமே அழியாது. அதனை யாராலும் அழிக்க முடியாது.

இதுதான் எனது கேள்விக்கான விடை என்று கூறினார். அதனைக் கேட்ட மன்னரும், மற்றவர்களும் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

கவிஞர் சித்ரவதனா தலை குனிந்தார். விகடகவியைப் பார்த்து, "கவிஞரே ! நான் போட்டியில் தோல்வியடைந்ததால், உம்மையே அரசவைக் கவிஞராக நியமிக்கும்படி மன்னரிடம் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

உடனே விகடகவி, "நான் ஏற்கனவே மன்னரிடம் ஒரு பொறுப்பில் இருக்கின்றேன் அதனால் எனக்கு இந்தப் பதவி வேண்டாம். நீரே இந்தப் பதவியில் இருந்து கொள்ளும். ஆனால் கவிஞர்களின் வயிற்றில் அடிக்காமல் நடந்து கொள்ளும்" என்று கூறினார். அதனைக்கேட்ட அனை வரும் வியப்பில் ஆழ்ந்தார்கள். உடனே மன்னர் "கவிஞரே! நீர் யார் ? உமது குரலை இதற்கு முன்னர் நான் கேட்டதாக நினைவிருக்கின்றது என்று கூறினார்.

உடனே விகடகவி தனது வேடத்தைக் கலைத்தார். அதனைக்கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

விகடகவி மன்னரைப் பார்த்து "மன்னர் மன்னா! அரசவைக் கவிஞர் இத்தனை நாட்களாக மற்ற கவிஞர்களுக்கு பரிசு கிடைக்காமல் அவர்களின் கவிதைகளை குற்றம் கண்டுபிடித்து விரட்டியடித்து வந்தார். நம் நாட்டில் அறிஞர்களும், கவிஞர்களும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு தாங்கள் பரிசளித்து கௌரவித்து, அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற ஆசையினாலேயே இப்படி செய்தேன்" என்று கூறினார்.

உடனே மன்னர் அரசவைக் கவிஞரை தண்டித்து, அறிஞர்களையும், கவிஞர்களையும் வரவழைத்து அவர்களுக்கு பரிசும், பணமும் கொடுத்து அவர்கள் குடும்பத்தின் வறுமையைப் போக்கினார்.

தனது ஆட்சியில் நடந்த தவறை சுட்டிக்காட்டிய விகடகவிக்கு ஏராளமான பரிசுகள் கொடுத்துப் பாராட்டினார். ஒருவர் இன்னொருவருக்கு தர்மம் செய்வதைத் தடுக்கக் கூடாது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் செல்லவுள்ள ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாதம் 22 ஆம் திகதி அளவில் இடம்பெறவுள்ள இந்த விஜயத்தின் போது இருநாட்டு பொருளாதார ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ( நி-8)

# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை வதந்திகளை நம்பாதீர்கள்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும், எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என அதன் தலைவர் டி.ஜே.ராஜ கருணா தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,



வதந்திகளுக்குப் பயந்து மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்றால் தான் எரிபொருள் பிரச்சினை எழும் எனத் தெரிவித்தார். (நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## நிலப்பூசணி

**Botanical name- Ipomoea mauritiana**
**Family- Convol vulaceae**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


பல்லாண்டு வாழும் ஓர் ஏறுகொடியாகும். வட மாகாணக் காடுகளில் நன்கு பரவி வளரக்கூடியது. மழை காலத்தில் செழிப்பாக வளர்ந்து காணப்படும். இது மண்ணிற்கு கீழ் ஒரு பானை வடிவில் (Pot like) காணப்படும் வேர்க்கிழங்காகும். இதனால் இதற்கு நிலப்பூசணி என்றும் பெயர்.

இவ் வேர்க்கிழங்கு மருத்துவக் குணங்கள் நிறையக் கொண்டுள்ளது.எமது உடலிலுள்ள தாதுக்களை விருத்தி செய்யக் கூடியது. உடலின் நிர்பீடனத்தை அதிகரிக்கச் செய்யக் கூடியது. பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சினைகளை போக்கக் கூடியது. போசாக்கு குறைந்த, வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு சிறந்த பலனைக் கொடுக்கக்கூடியது.

குழந்தையின்மையிலும் இவ் நிலப் பூசணிக்கிழங்கு பயன்படுத்தப்படுகிறது. இக்கிழங்கைப் பயன்படுத்த முன்பு நிலத்திலிருந்து இக்கிழங்குகளைச் சேகரித்து தோலைச் சீவி துண்டுகளாக வெட்டி, ஒரு மட்பானை எடுத்து அதில் பசுவின் பச்சைப்பால் விட்டு பானையின் வாய்க்கு சிறிது தொய்வாக துணியைக் கட்டி, அதில் சிறு துண்டுகளாக வெட்டிய நிலப் பூசணிக் கிழங்குகளை வைத்து வாய் பொருத் தக்கூடிய ஒரு அகலால் மூடி அடுப்பேற்றி பால் வற்றும் வரை எரித்து நன்றாக உலர்த்தி, பொடித்து, அரித்து வைத்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும்.

நிலப்பூசணியில் உயிர்ச் சத்துக்கள், கனிமங்கள் நிறைவாகக் காணப்படும். இவ் நிலப் பூசணிக்கிழங்கில் காணப்படும் வேதியற் பொருளான dios genin எனும் இரசாயனச் சத்தானது மூளைச் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது.





(Brain Function) இவ் நிலப் பூசணிக்கிழங்கில் காணப்படும் உயிர்ச்சத்து C மற்றும் எதிர் ஒட்சியேற்ற (Anti oxidants) தன்மைகள் சருமத்தில் காணப்படும் கலங்களைப் பாதுகாப்பதுடன் கொலாஜின் உற்பத்தியையும் கூட்டுவதால் சருமத்தில் elasticity இன் பராமரிக்கவும் உதவுகிறது.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குச் சிறந்த பலனைக் கொடுக்கக் கூடியது. அதாவது ஈஸ்ரஜின் ஹோமோனின் செயற்பாட்டை சீராக வைத்திருக்கும் ஆற்றல் உண்டு. மூட்டுக்களில் ஏற்படும் தாபிதத்தை குறைப்பதனால் மூட்டுக்களில் ஏற்படும் வலி, வீக்கம் போன்றவற்றை குறைக்கும் தன்மையும் உண்டு.

இவ் நிலப்பூசணியில் இருக்கும் Anti oxidant தன்மை புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடியது. முக்கியமாக குடற் புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் இருப்பதாக ஆய்வுகளும் உறுதிப்படுத்துகிறது.

இந் நிலப்பூசணியில் காணப்படும் நார்ச்சத்தானது சமிபாட்டை மெதுவாக்குவதால் இரத்தத்தில் சீனியின் தன்மையையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

அத்துடன் இந் நிலப் பூசணிக்கிழங்கில் காணப்படும் கரையக்கூடிய நார்ச்சத்தானது குடலில் நல்ல பக்றீரியாக்களின் உற்பத்தியை அதிகரிப்பதால் சமிபாட்டிற்குத் தேவையான நொதியங்களின் உற்பத்தியையும் தூண்டி ஆரோக்கியமான குடலின் செரிமானத்திற்கு உதவுகிறது.

எனவே இதனை மற்றைய அதாவது கருணைக் கிழங்கு சமைப்பது போல் சமைத்துச் சாப்பிடலாம். இதில் குறைந்த கலோரியும், கூடிய நார்ச் சத்தும் காணப்படுவதால் உடல் எடையைக் குறைக்கும் ஆற்றலும் உண்டு.

சித்தமருத்துவத்தில் இந் நிலப்பூசணியை மாதவிடாய்க் காலத்தின் பின்பு பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை பொதுவாக என்புகளின் பாதிப்பு, மன அழுத்தம் போன்றவற்றை தீர்க்கக் கூடியது.

அதாவது நிலப்பூசணியானது Vatural altemative to estrogens ஆக பயன்படுத்தப்படுகிறது.

இந் நிலப்பூசணியானது இனிப்புச் சுவையும், தட்பமான வீரியத்தையும் சமிபாட்டின் பின்பு இனிப்பாக மாறக்கூடிய தன்மையையும் கொண்டது.

இந் நிலப்பூசணித் தூளில் 2 கிராம் அளவு காலை மாலை தேனில் 48 நாட்கள் சாப்பிட்டுவர தளர்ந்த உடலை இறுகச் செய்யும் ஆற்றல் கொண்டது.

அதாவது இளைத்த உடற்கட்டுக்கள் செழுமையாகும். மலக்கட்டையும் நீக்கி மலத்தை இலகுவாக வெளியேறச் செய்யும். தாய்ப்பால் ஊட்டும் தாய்மாருக்கும் தாய்ப்பால் சுரப்பை கூட்டுவதற்கும் இதனைப் பயன்படுத்தலாம்.

நிலப்பூசணியில் மேலும் பொட்டாசியம் சத்தும் காணப்படுகிறது. இதனால் இரத்த அழுத்தத்தைச் சீராக வைத் திருக்கும் ஆற்றலும் உண்டு. பொதுவாக சித்த மருத்துவத்தில் லேகியம் அல்லது இளகங்களில் முக்கிய மூலிகை வேராக நிலப்பூசணி சேர்க்கப்படுகிறது.

இதனை ஆங்கிலத்தில் Wild yam root என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# 10 ஆயிரம் ரன்களை கடக்க இம்ரான்கான் தான் காரணம்

## சுவாரசியம் பகிரும் கவாஸ்கர்



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் ஆளாக 10,000 ரன்களைக் கடப்பதற்கு முன்னாள் பாகிஸ்தான் கப்டன் தான் காரணமென்று கவாஸ்கர் தெரிவித்திருக்கிறார்.


ஸ்போர்ட்ஸ் ஊடக நிகழ்ச்சியில் இதுகுறித்து பேசியிருக்கும் கவாஸ்கர், "டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் 10,000 ரன்களை எட்டுவதற்கான வாய்ப்பைப் பெற்றதற்கு ஒரே காரணம் இம்ரான் கான் தான்".

டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் ஓய்வு பெறுவதற்கு ஓராண்டு முன்பு (1986), இங்கிலாந்தில் அந்நாட்டுக்கெதிரான தொடரில் முதல் டெஸ்ட் போட்டிக்குப் பிறகு நானும், இம்ரானும் ஒரு நண்பருடன் லண்டனிலுள்ள ஒரு இத்தாலிய உணவகத்துக்கு மதிய உணவு சாப்பிடச் சென்றோம்.

அப்போது, "இதுதான் என்னுடைய கடைசி தொடர். இந்தத் தொடருக்குப் பிறகு ஓய்வுபெறுவேன்" என்று இம்ரானிடம் கூறினேன். அப்போது, "உங்களால் அது முடியாது" என்று அவர் கூற, "என்னால் முடியாது என்று நீங்கள் எதைக் குறிக்கிறீர்கள். அது என்னுடைய விருப்பம்" என்றேன். அதற்கு, "இல்லை இல்லை, பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது. நீங்கள் விளையாடும் இந்திய அணியை நான் வீழ்த்த விரும்புகிறேன். நீங்கள் இல்லாத இந்திய அணியை நான் வெல்ல விரும்பவில்லை" என்று இம்ரான் கூறினார்.

"ஆனால், பாகிஸ்தான் வரவில்லையே" என்று நான் கேட்க, "ஐசிசி மீட்டிங் நடக்கிறது. அடுத்த வாரம் நீங்கள் அறிவிப்பைப் பெறுவீர்கள்" என்று இம்ரான் சொன்னார். நானும், "அறிவிப்பு வந்தால் தொடர்ந்து விளையாடுவேன். இல்லையென்றால் அடுத்த டெஸ்ட் போட்டியோடு ஓய்வுபெறுவேன்" என்றேன்.

அவர் கூறியது போலவே அறிவிப்பும் வந்தது. நானும் தொடர்ந்து விளையாடினேன். நான் மட்டும் அப்போதே ஓய்வுபெற்றிருந்தால், 9,200 முதல் 9,300 ரன்களில் கரியரை முடித்திருப்பேன். பாகிஸ்தான் இந்தியா வந்ததாலும், அதற்கிடையில் இந்தியாவில் இரண்டு தொடர்கள் நடந்ததாலும் நான் 10,000 ரன்களைத் தொட்டேன்." என்று கவாஸ்கர் சுவாரசியமாக பதிலளித்தார்.



பின்னாளில், கவாஸ்கரின் இந்தச் சாதனையை 2005 ஆம் ஆண்டில் மற்றொரு இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் முறியடித்தார். மேலும், டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்கள் அடித்தவர்கள் பட்டியலில் 15,921 ரன்களுடன் சச்சின் டெண்டுல்கர் தான் இன்றும் முதலிடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# சிறந்த கழக அணித்தெரிவில் சென்றலைட்ஸ் அணி முன்னிலை

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 16 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு வழங்கப்படும் புள்ளிகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். நகரில் தை 1 ஆம் திகதி தொடக்கம் தை 3 ஆம் திகதி வரை மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த பாலகிருஸ்ணன் ரி-20 தொடரில் 6 போட்டிகளும், AB விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த JAFFNA CRICKET CHAMPION தொடரின் இறுதிப் போட்டியும் எல்லாமாக 7 போட்டிகள் உள்ளடங்கும்.

அதன் பிரகாரம் சென்றலைட்ஸ் 12.60 (2 போட்டிகள்), AB 6.57 (2 போட்டிகள்), விக்ரோறியன்ஸ் 5.27 (1 போட்டி), கே.சீ.சீ.சீ 4.29 (1 போட்டி), யூனியன்ஸ் 4.22 (1போட்டி), ஓல்ட் கோல்ஸ் 4.09 (1 போட்டி), அரியாலை 2.17 (1 போட்டி), யாழ்.ஜொனியன்ஸ் 1.98 (1 போட்டி), ஸ்கந்ததாஸ்ரார்ஸ் 1.94 (1 போட்டி) ஸ்ரான்லி 1.63 (1 போட்டி), ரி.சி.சி 0.98 (1 போட்டி) ஆகியன முறையே புள்ளிகளைப் பெற்றுள்ளன.

மாசி மாதத்தில் நடைபெற்ற போட்டிகளின் விபரம் இம்மாத இறுதியில் வெளியாகும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# டுபாய் ஓபன் டென்னிஸ் சம்பியனான சிட்சிபாஸ்




டுபாய் ஓபன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் வென்றார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் துபாய் ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் கிரீஸ் வீரர் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், கனடாவின் பெலிக்ஸ் ஆகர் உடன் மோதினார்.

இதில் அதிரடியாக ஆடிய சிட்சிபாஸ் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (6-8)

# அரை இறுதிப் போட்டிக்கு தகுதியான தென் ஆபிரிக்கா

## தகர்ந்து போன ஆப்கான் கனவு



ஐசிசி சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் கராச்சியில் 'பி' பிரிவில் நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து - தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின.

முதலில் பட் செய்த இங்கிலாந்து அணி 38.2 ஓவர்களில் 179 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஜோ ரூட் 37, ஜோப்ரா ஆர்ச்சர் 25, பென் டக்கெட் 24, கப்டன் ஜாஸ் பட்லர் 21, ஹாரி புரூக் 19, ஜேமி ஓவர்டன் 11 ரன்கள் சேர்த்தனர். தென் ஆபிரிக்க அணி சார்பில் மார்கோ யான்சன், வியான் முல்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். கேசவ் மகாராஜ் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

180 ரன்கள் இலக்குடன் பட் செய்த தென் ஆபிரிக்க அணி 29.1 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 181 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ராஸி வான்டர் டஸ்ஸன் 87 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 72 ரன்களும் ஹென்றிச் கிளாசன் 56 பந்துகளில், 11பவுண்டரிகளுடன் 64 ரன்களும் விளாசினர். டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 0, ரியான் ரிக்கெல்டன் 27 ரன்களில் ஜோப்ரா ஆர்ச்சர் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி குறைந்தது 207 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே இதே பிரிவில் 3 புள்ளிகளுடன் உள்ள ஆப்கானிஸ்தான் அணி நிகர ரன் ரேட் அடிப்படையில் அரை இறுதிக்கு தகுதி பெற முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால் இங்கிலாந்து அணி 179 ரன்களுக்கு சுருண்டது. இதனால் தென் ஆபிரிக்க அணி இலக்கை துரத்துவதற்கு முன்னதாகவே அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. ஆப்கானிஸ்தான் அணி தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது.

தற்போதைய வெற்றியின் மூலம் தென் ஆபிரிக்க அணி 5 புள்ளிகளுடன் லீக் சுற்றில் தனது பிரிவில் முதலிடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறியது. (6-8)

# தொடர் தோல்விகளால் வெளியேறிய இங்கிலாந்து

நடப்பு ஐசிசி சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரின் குரூப் சுற்றில் 'பி' பிரிவில் ஒரு வெற்றி கூட இல்லாமல் வெளியேறி உள்ளது இங்கிலாந்து அணி. வெற்றியின்றி வெளியேறிய இங்கிலாந்து ஒருநாள் கிரிக்கெட் பார்மெட்டை பொறுத்தவரையில் இங்கிலாந்து அணி கடைசியாக விளையாடிய 7 போட்டிகளில் தோல்வியை தழுவி உள்ளது.

இந்தியா உடனான 3 போட்டி, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் மற்றும் தென் ஆபிரிக்கா வசம் தோல்வியை தழுவி உள்ளது. இதற்கு முன்னர் கடந்த நவம்பர் மாதம் மேற்கு இந்தியத் தீவுகள் உடனான போட்டியில் இங்கிலாந்து தோல்வியை தழுவி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி என்பது ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒரு பண்பு மட்டுமல்ல, அது வாழ்வின் மிக முக்கிய சக்தியாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருக்கு...

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருக்கு அன்பு வணக்கம். எங்கள் தமிழ் இனத்தின் நிலை எவ்வாறாயிற்று என்பது தாங்கள் அறியாததல்ல.

இதற்குக் காரணம் போருக்குப் பின்னர் ஈனத்தனமுடையவர்கள் எம் இனத்திற்கு தலைமை தாங்கினர். இதுவே எங்கள் இனம் நடுத்தெருவில் நிற்பதற்கு காரணமாயிற்று.

இந்த உண்மையை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். ஆனால் இன்னமும் அந்த ஈனத்தன அரசியல் தொடர்வதுதான் வேதனைக்குரியது.

உண்மை. நேற்று முன்தினம் (01) ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தாங்கள்; மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தமிழ்க்கட்சிகள் ஒன்றுசேர வேண்டுமெனக் கூறியிருந்தீர்கள்.

இஃது உங்களின் தனிப்பட்ட கருத்தா அல்லது தமிழரசுக் கட்சியின் கருத்தா என்பது தெரியவில்லை. ஆனால் நீங்கள் விடுத்த இந்த அறிவிப்பு நெஞ்சுக்கு நீதியானதல்ல என்பது மட்டும் உண்மை.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்று சேருகின்ற எண்ணம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அறவே கிடையாது.

இப்போது தமிழரசுக் கட்சி பிரிந்து கிடக்கிறது. அந்தக் கட்சியை ஒற்றுமைப்படுத்துவதற்கு எவராலும் முடியவில்லை.

தவிர, எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நடக்கப் போகின்ற பிடுங்குப்பாடுகள்தான் எங்கள் தமிழ் அரசியலில் பேசுபடுபொருளாக இருக்கப் போகிறது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுசேர்வதற்கு வாருங்கள் என்று நீங்கள் அழைப்பு விடுப்பது எதற்கானதென்பதுதான் புரியவில்லை.

ஆம், தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி புதிய அரசியலமைப்புப் பற்றி ஆராய்வோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்பை உங்களால் சாதகமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

அதை அடியோடு நிராகரித்தீர்கள். அந்த நிராகரிப்பு எதற்கானது. அதற்குள் ஏதேனும் நியாயப்பாடுகள் உண்டா?

அவ்விதம் நியாயப்பாடுகள் இல்லையாயின், மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுசேருவோம் என்று நீங்கள் விடுத்த அழைப்பு எவ்வகையில் நியாயப்படும்.

ஆக, தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென நீங்கள் உளப்பூர்வமாக விரும்பியிருந்தால், உங்களைத் தேடிவந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்புத் தந்தபோது அதற்கான உங்களின் பதில்; நல்லது. கஜேந்திரகுமார் அவர்களே! நாங்கள் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து புதிய அரசியலமைப்பைப் பற்றி ஆராய்வோம்.

அதுவே எம் இனத்துக்கு நாம் செய்ய வேண்டிய பணி என்று நீங்கள் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறியிருந்தால், உங்கள் ஒற்றுமை பற்றிய எண்ணம் உயர்வு பெற்றிருக்கும்.

ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை. மாறாக, இப்போது நீங்கள் திடீரென விடுத்த அழைப்பு தமிழினத்தை ஏமாற்றுகின்ற நோக்கத்தைக் கொண்டது.

இதை நீங்கள் மறுப்பீர்களாயின், நல்லது எங்கே நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து மீண் டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவோம்.

ஆனால் இதற்கு முன்னதாக, இந்தத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி தனது மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றட்டும்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏனைய கட்சிகளுடன் ஆராய்கிறோம்

## மன்னாரில் வைத்து சுமந்திரன் தெரிவிப்பு

(மன்னார்)

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் எவ்விதத்தில் இத்தேர்தலை அணுக முடியும் என்றும், தேர்தலின் பின்னர் வெவ்வேறு அணிகளாகப் போட்டியிட்டாலும் ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்ற போது சேர்ந்து அமைக்கக்கூடிய வகையில், தேர்தலுக்கு முன்னர் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் சகல மாவட்டக் கிளைகளையும் சந்தித்து வரும்நிலையில்எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஞாயிற்றுக் கிழமை (2) மன்னார் மாவட்டக் கிளையுடன் மன்னாரிலுள்ள அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்தார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது. கட்சியின் சகல அங்கத்தவர்களும் குறித்த கூட்டத்தில் பங்கு பற்றியிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகள் குறித்து ஆராய்ந்துள்ளதோடு, குறித்த சபைகளில் வேட்பாளர்களை நியமிப்பது குறித்தும் குறிப்பாக வட்டார வேட்பாளர்கள், இரண்டாவது பட்டியல் வேட்பாளர்கள் நியமிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் நாட்டில் இல்லாதவர்கள் மற்றும் வேறு கட்சியில் இணைந்தவர்கள் குறித்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எனினும் மிகவும் செல்வாக்குள்ளவர்களை வட்டார வேட்பாளராக நியமிப்பது என ஏற்கனவே கட்சி எடுத்த தீர்மானத்துடன் மன்னார் மாவட்டக் கிளை இணங்கியுள்ளது என்றார். (ந-7)

# வரிக்குமேல் வரி விதிக்கும் தே.ம.சக்தி அரசாங்கம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சாடல்

தற்போதைய அரசாங்கம் வரிக்குமேல் வரி விதிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் வற் வரி மட்டுமின்றி இன்னும் பல நேரடி மற்றும் மறைமுக வரிகளை மக்கள்மீது சுமத்தி, அரசாங்கம் மக்களை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தி வருகிறது.

மேலும் சேவை ஏற்றுமதித் துறைக்கு 15 சதவீதம் புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் டொலர் பற்றாக்குறைக்குத் தீர்வு ஏற்றுமதி ஊக்குவிப்பாகும். ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குப் பதிலாக வரி விதிப்பது நியாயமற்றது.

நாட்டின் பொருளாதார நிலை, நாட்டின் டொலர் பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி கையிருப்புத் தொடர்பில் போதிய விளக்கம் இல்லாததால் இவ்வாறு நியாயமற்ற வரி விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய வரி விதிப்பினூடாகப் பண மோசடி நடப்பதோடு நாட்டிற்குப் பாதகமே விளையும். நாட்டு மக்களை ஏமாற்றமடையச் செய்து, இளைஞர்களின் அபிலாஷைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ந-7)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(மாத்தளை)

மாத்தளையில் சட்ட விரோத மின்சார வேலியில் சிக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

யட்டவத்த, வாலவெல பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 43 வயதுடைய நாவுலப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இதேவேளை சட்ட விரோதமாக வயலுக்கு மின்சாரம் இணைத்த வயலின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபரை மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# மன்னார் முழங்காவிலில் வாகன விபத்து

மன்னார் முழங்காவில் 19ம் கட்டைப் பகுதியில் நேற்று இரவு லான்ட்மாஸ்டர் ஒன்றும் அரச பேருந்தும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

லான்ட்மாஸ்டர் ஒன்று பின் சமிக்ஞை விளக்கு ஒளிரமல் சென்று கொண்டிருந்துள்ளது. அதன் பின்னால் அரச பேருந்து சென்றுள்ளது.

எதிரே வேறு ஒரு வாகனம் ஒளியைப் பாய்ச்சிய வண்ணம் வந்த நிலையில், பேருந்து முன்னால் சென்ற லான்ட்மாஸ்டரை மோதியுள்ளது.

இந்த விபத்தில் லான்ட்மாஸ்டர் தூக்கி வீசப்பட்டுள்ளது. (ந-7)

# மக்களின் கருத்துக்களுக்கு செவிசாயுங்கள் - நாமல் எம்.பி

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் தலைவரும், அமைச்சர்களும் நாட்டு மக்களின் கருத்துக்களைச் செவிமடுக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிற்சங்கத்தினர், வர்த்தக சமூகம், சிவில் சமூக அமைப்புகள், இளம் தலைமுறையினர் ஆகியோரின் கருத்துக்களைச் செவிமடுக்காத காரணத்தினாலேயே நாங்கள் உருவாக்கிய அரசாங்கங்கள் வீழ்ச்சியடைந்தன.

எனவே தற்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதிம், அமைச்சர்களும் நாட்டு மக்களின் கருத்துக்களை செவிமடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததில் இருந்து எல்லாத் தவறுகளுக்கும் எங்கள் மீதே குறை கூறிக் கொண்டிருக்கின்றது.

தற்போதைக்கு ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கும் நாங்கள் தான் காரணம் என்று கூறப் போகின்றார்களோ தெரியாது என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ந-7)

# யானை தாக்கி பெண் உயிரிழப்பு

பானாதரகம, தெமட்டகொல்லப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் குறித்த பெண் தனது வீட்டின் முற்றத்தைத் தூய்மையாக்கும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெ ளி நா டு

# 3 ஆம் உலகப் போர் மூளும் அபாயம்!

## ❖ ஜெலன்ஸ்கியிடம் சண்டையிட்ட ட்ரம்ப்

## ❖ குஷியில் ரஷ்யா

**(வோஷிங்டன்)**

**உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியால் மூன்றாம் உலகப்போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் போரில் உக்ரைன் வெற்றி பெறாது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**



உக்ரைன்-ரஷ்யா இடையே 3 ஆண்டுகளுக்கு மேல் போர் நடந்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்து, ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் உரையாடினார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய நிதி உதவிகளுக்கு பதிலாக உக்ரைனில் உள்ள அரிய வகை கனிம வளங்களை வெட்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவுக்கு கால வரம்பில்லாமல் வழங்க ட்ரம்ப் வலியுறுத்தி வந்தார். மேலும் உக்ரைனில் தேர்தல் நடத்தாமல் ஜெலன்ஸ்கி பதவியில் நீடிப்பதாக ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், அமெரிக்கா வந்துள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை சந்தித்து கலந்துரையாடினார்.

உக்ரைனில் உள்ள கனிமங்களை அமெரிக்காவை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பத்திரிக்கையாளர் முன்னிலையில் இருதலைவர்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் இருவரும் பதிலுக்குப் பதில் பேசிக் கொண்டே இருந்தனர். இதில் ஜெலன்ஸ்கி மீது ட்ரம்ப் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

ட்ரம்ப் கூறும்போது, "நீங்கள் பெரிய சிக்கலில் இருக்கிறீர்கள். இதில் நீங்கள் வெற்றி பெறப் போவதில்லை. நீங்கள் இலட்சக்கணக்கான உயிர்களோடு விளையாடுகிறீர்கள். 3 ஆம் உலகப் போரோடு விளையாடுகிறீர்கள். நீங்கள் செய்வது நாட்டிற்கு மிகவும் அவமரியாதையானது.

உங்களிடம் போதுமான இராணுவம் இல்லை. உங்களுக்காக 350 பில்லியன் டொலர்களை அமெரிக்கா செலவு செய்தது. உங்கள் வீரர்கள் அமெரிக்கப் போர் கருவிகளை வைத்தே சண்டையிட்டார்கள்.

இல்லையென்றால் போர் 2 வாரத்தில் முடிந்திருக்கும். நீங்கள் நன்றியுடன் இருக்க வேண்டும்.

ஆனால் எங்கள் நாட்டிற்கு அவமரியாதையை காட்டுகிறீர்கள். உங்களால் போரில் வெற்றி பெற முடியாது என்று எனக்குத் தெரியும்.

நீங்கள் இப்படி நடந்து கொண்டால் அமைதி ஒப்பந்தத்தை மிகவும் கடினமாக்கும் என்று நான் பயப்படுகிறேன். நீங்கள் தனியாக செல்ல எந்த வாய்ப்பும் உங்களிடம் இல்லை. மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். உங்களிடம் வீரர்கள் குறைவாக உள்ளனர்.

ஆனால் நீங்கள் எனக்கு போர் நிறுத்தம் வேண்டாம். நான் தொடர்ந்து போராட விரும்புகிறேன்" என்று எங்களிடம் கூறுகிறீர்கள்.

உயிர்கள் இழக்கப்படாமல் இருக்க போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன். ஆனால் நீங்கள் போர் நிறுத்தத்தை விரும்பவில்லை. நான் புடினுடன் இணையவில்லை, நான் யாருடனும் இணையவில்லை. நான் அமெரிக்காவுடன் இணைந்திருக்கிறேன்.

நீங்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள் அல்லது நாங்கள் வெளியேறி விடுவோம் என்று தெரிவித்தார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறும் போது, "நாங்கள் எங்கள் சொந்த நாட்டில் இருக்கிறோம். இவ்வளவு காலமாக நாங்கள் வலுவாக இருந்தோம். நாங்கள் உங்களுக்கு நன்றி தெரிவித்தோம். போரின் போது, அனைவருக்கும் பிரச்சினைகள் உள்ளன. உங்களுக்கும் கூட பிரச்சினைகள் உள்ளன. இப்போது அதை உணர மாட்டீர்கள், ஆனால் எதிர்காலத்தில் நீங்கள் உணருவீர்கள்" என்று கூறினார்.

ஆனால் ஜெலன்ஸ்கி பேசியபோது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், துணை ஜனாதிபதி வான்ஸூம் குறுக்கிட்டு பேசிக் கொண்டே இருந்தனர். இதில் இருவரும் சத்தமாக பேசினார்கள். அப்போது வான்ஸிடம் ஜெலன்ஸ்கி, சத்தமாக பேசுவதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இதனால் வான்ஸ் - ஜெலன்ஸ்கி இடையேயும் கடும்வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் வெள்ளை மாளிகை ஓவல் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

அப்போது பேச்சு வார்த்தையை பாதியில் முடித்துக் கொண்டு ட்ரம்ப எழுந்தார். இதனால் இந்தச் சந்திப்பில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் பாதியில் முடிந்தது. வெள்ளை மாளிகையை விட்டு வெளியே செல்லுமாறு ஜெலன்ஸ்கி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

உடனே அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இதன் காரணமாக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சியும், மதிய விருந்து நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள்...

வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

சங்குச் சின்னத்தில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடும் கட்சிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணி தற்போது இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மே முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் கூட்டுச்சேர்வதற்கு அழைப்பு வந்தால், தாம் அது தொடர்பில் கலந்துரையாடத் தயார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய தமிழ்க் கட்சிகளை மீண்டும் இணைக்க தாம் முயற்சிப்பதாகத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ள நிலையில், கட்சியின் பதில் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சி தனித்தே தேர்தலில் போட்டியிடும் என ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார். (ந-7,33)

## எரிபொருள்...

வித்துள்ளார்.

இது குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடு முழுவதும் இன்று (நேற்று) 1,581 முன்பதிவுகளை பெற்றுள்ளோம். ஞாயிற்றுக்கிழமை என்றபோதிலும் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. எனவே எரிபொருள் பற்றாக்குறை நிலவாது.

ஓகஸ்ட் மாதம் இறுதிவரை எரிபொருளுக்கான முன்பதிவுகளைச் செய்துள்ளோம்.

நாட்டில் எரிபொருளுக்குப் பற்றாக்குறை நிலவ வேண்டுமானால் அதன் இருப்பு முடிய வேண்டும் அல்லது எரிபொருளை முன்பதிவு செய்வதற்கான நிதிப் பிரச்சினை இருக்க வேண்டும். இந்தச் சிக்கல்கள் எதுவும் தற்போது இல்லை” என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## செம்மணி...

கப்பட்டு, அநீதிகள் நடக்கக்கூடும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“கொக்குத்தொடுவாய்ப் பகுதியிலும், மன்னார் பிரதேசத்திலும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்போது இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்.செம்மணியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனை நான் நேரில் சென்று பார்த்தேன்.

நான் அங்கு சென்று பார்த்தபோது பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்படவும் இல்லை. எங்கள் கட்சி உறுப்பினர்களில் ஒருவர் மயானத்தை நிர்வகிக்கும் குழுவிலும் உள்ளார்.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறு அவரிடம் கூறினேன். அதன் பிறகு நீதிபதிகள் தலையிட்டனர். தற்போது இந்த விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. ஆனால், இங்கே புதைகுழிகள் தொடர்பில் எந்த நெறிமுறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணம் காட்டப்படுகிறது. இந்த விடயங்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும். மன்னார், கொக்குத்தொடுவாய் ஆகிய இரண்டு இடங்களிலும் இழுபறி நிலையே காணப்படுகின்றது.

இந்நிலை தொடர்ந்தால் யாழ். செம்மணியிலும் ஆதாரங்கள் சிதைக்கப்பட்டு அழிக்கப்படலாம் என்று அஞ்சுகின்றோம். குறித்த பகுதிக்குப் பாதுகாப்பு வழங்காமல் இருப்பதால், சாட்சியங்கள் அழிக்கப்பட்டு, அநீதிகள் நடக்க வழிவகுக்கும் எனச் சுட்டிக் காட்டினார். (ந-7)

## மே மாதம்...

யாகும் எனவும் தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தேர்தல் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைகளின் பட்டியல் இரண்டொரு நாட்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படும்.

அதன் பின்னர் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த உத்தியோகபூர்வ அறிவித்தல், வெளியான நாளிலிருந்து 14 நாட்கள் கழித்து 18ஆவது நாள் வரை மூன்றரை நாட்கள் வேட்புமனுக்கள் ஏற்பதற்கான தினங்களாக அறிவிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப் பணி பூர்த்தி அடைந்ததும், ஐந்து முதல் ஏழு வார காலம் தேர்தல் பிரசாரத்துக்கு இடமளித்து அதற்கேற்ற வகையில் தேர்தல் நடைபெறும் நாள் அறிவிக்கப்படும்.

இந்த வாரத்தில் தேர்தல் பற்றிய உத்தியோக பூர்வ அறிக்கை எந்தத் திகதியில் வெளியாகின்றதோ அதிலிருந்து சரியாக இரண்டு மாதங்கள் கழித்து மே முதல் வாரத்தில் தேர்தல் நடத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## பிரத...

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதமளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ் விஜயமானது அரசியல், பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் நிலையில், மோடியின் வருகைக்கு முன்னர் இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அநுர அரசு கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறது.

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு [illegible] அச்சத்தை ஏற்படுத்திய நிலையில் அதனைச் சீர்செய்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே இராணுவம் உள்ளிட்ட முப்படைகளிலிருந்தும் தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்கான பொறிமுறையைப் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் குறித்த இராஜதந்திரக் கலந்துரையாடல்கள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

இலங்கைக்கு மோடியின் விஜயமானது தேசிய புத்தாண்டு தினக் கொண்டாட்டத்தை ஒட்டியதாக இரண்டு நாட்கள் அமையவுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது விஜயம் இரத்துச் செய்யப்படாமலிருக்க நாட்டின் பாதுகாப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 5763
W 7 0 8 5 6 6
அத சம்பத
W 8 5 6 6
சீட்டிழுப்பு இலக்கம் 0338
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1793
O 34 38 49 67 O
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance 32001

மெகா பவர்
திகதி 02/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2111
V 14 07 22 61 71

ஜய
திகதி 2025.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 031
C 5 7 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4005
சீட்டிழுப்பு திகதி 02.03.2025
K 07 50 66 76
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 1072
மீனம் 17 26 30 45 மீனம்
85716 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.03.2025 வெற்றி வாரம் 471
E 1 1 8 1 1 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,691,378.40
72821
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2737
சீட்டிழுப்பு திகதி 2025.03.02 தினம் ஞாயிற்றுக்கிழமை
26 27 35 60 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,579,948.00
DLB

சனிதா
திகதி 02.03.2025 வெற்றி வாரம் 4898
02 63 66 70 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,364,940.80
55563
DLB

சசிரி
வெற்றி வாரம் 634
02.03.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 28 33 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4449
சீட்டிழுப்பு திகதி 02.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
03 04 10 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.15,799,015.60
122206
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 14 19 40 45 68
1913
02.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,110,307.80
DLB

ஞாயிற்றுக்கிழமை அடுத்த சுப்பர் ஜக்பொட்
வெற்றி வாரம்: 2563 ரூ.76,206,456.80
சீட்டிழுப்பு திகதி: 2025.03.02
அத கோடிபதி ADA KOTIPATHI
01 06 55 57 N
878314
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத ஆயு...

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச படைகளிமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மக்கள் விடுதலை முன்னணி பாதுகாப்பு அமைச்சுக்கு முழுமையாக ஒப்படைக்கவில்லை என ஐக்கிய முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் கையிருப்பில் எவ்வித நெருக்கடியும் தற்போது ஏற்படவில்லை.எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் எரிபொருள் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

எரிபொருள் விநியோகஸ்த்தர்களுக்கு நூற்றுக்கு 3 ரூபாய் என்ற அடிப்படையில்மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு காலத்திலும் இந்தப் பிரச்சினை காணப்பட்டது.

எரிபொருளின் விலை உயர்வடையும் போது வழங்கப்பட்ட மேலதிகக் கட்டணம் அதிகரிக்கப்படும். இது ஒருமுறையற்றதொரு செயற்பாடாகவே காணப்பட்டது.

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர இதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.தற்போது இந்த அரசாங்கம் 3 ரூபாய் மேலதிக தொகையை வழங்குவதை இடைநிறுத்துவதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எரிபொருள் விநியோகஸ்த்தர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள்.

அரசாங்கம் இவ்விடயத்தில் தான் தோன்றித்தனமாகச் செயற்படாமல், எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அரசாங்கம் ஒருசில விடயங்களில் தன்னிச்சையாக செயற்படுவது பல பிரச்சினைகளுக்குப் பிரதான காரணியாக அமைகிறது.

பாதாளக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அநுர அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களைக் குற்றஞ்சாட்டுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. பாதாளக் குழுக்களின் செயற்பாட்டுக்கான ஆரம்பத்தை மக்கள் விடுதலை முன்னணியே ஆரம்பித்து வைத்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியது. மிகுதி ஆயுதங்கள் அழிக்கப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணி 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரச படைகளில் இருந்து கைப்பற்றிய பெரும்பாலான ஆயுதங்கள் முழுமையாகப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை. சட்டவிரோத ஆயுதங்களை செயலிழக்க செய்ய வேண்டுமாயின் அதற்கான ஆரம்பப்பணியை மக்கள் விடுதலை முன்னணியின் பத்தரமுல்லை காரியாலயத்தில் இருந்து மேற்கொள்ள வேண்டும்.

தலதாமாளிகை மீது மக்கள் விடுதலை முன்னணி தான் தாக்குதல் நடத்தியது. ஆகவே அதற்கும் அரசாங்கம் நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்றார். (ந-7)

## கொக்குத்தொடு...

அந்த வகையில் கடந்த 27.2.2025 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வழக்கில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா மற்றும் காணாமல் போனோர் அலுவலக சட்டத்தரணிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணிகள் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா அவர்கள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய்மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டு அறிக்கைகள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் இருந்த உடைகள் தொடர்பான ஆய்வறிக்கையும் இரண்டாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணியின் போது அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆட்களை இனங்காணக் கூடிய பொருட்கள் சம்பந்தமான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டாவது அறிக்கையில் அகழ்வாய்வின் போது கண்டு பிடிக்கப்பட்ட இலக்கத்தகடுகள் ஆடைகளில் பொறிக்கப்பட்ட இலக்கங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த இலக்கத்தகடுகளுக்குரியவர்களின் உறவினர்கள்யாராவது முன்வந்தால் இறந்தவர்களை நாங்கள் இலகுவாக இனங்காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இறுதியறிக்கை எதிர்வரும் ஆறு வார காலங்களில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.இறுதி அறிக்கையின் போது சட்ட வைத்தியர்களின் பூரண அறிக்கை இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள் என்ன காரணத்தினால் இறந்தார்கள் அவர்களின் வயது, உயரம் போன்ற விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் ஆறு வார காலத்தில் சமர்ப்பிக்கப்படும். இவ் வழக்கானது அடுத்த தவணைக்காக மார்ச் 27 க்கு தவணையிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ந-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 - 07 - 1946



மறைவு
01 - 03 - 2025

### திருமதி மனோன்மணி தியாகராசா (மனோன்)

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.1010/17 கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடியை (கண்ணன் இசைக்குழு ஒழுங்கை) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி (மனோன்) தியாகராசா அவர்கள் (01.03.2025) சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சோமசுந்தரம், பரராசசிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வசந்தகுமார் (Serendip be the change Foundation - Senior Programme Officer, Jaffna Former UNICEF, UNHCR GTZ Plan International Senior field officer, Delft Piradeshiya Sabha Development Officer), ரவிக்குமார், சிறிசாந்தகுமார்(Spain), ஜெயக்குமார்(Norwich - UK), ரஜீவ்குமாரி(சசி)(சிற்றுண்டிச்சாலை நடத்துனர் - சண்டிலிப்பாய் பிரதேசசெயலகம்), யசோதினி (Norwich-UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வலன்ரைன்(Norwich - UK), ரூபன்(Malaysia), றொசானி(Development Officer - DS Office, Sandilipay), துளசிகா, கிரிஜா(Spain), துசியந்தி(Norwich - UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனொக்ஸ்மரினோ(St. Patrick's College), அனாஒபிரின்(J/Ilavalai Convent M.V), அனன்சியாமெர்லின்(J/Ilavalai Convent M.V), திவிசன்(J/ Kokkuvil Hindu Primary School), ஆதீசன் (Kokkuvil Pre School), கிஷானி(Spain), பிரஜித்(Spain), சஞ்ஜித் (Spain), சஸ்மிகா(Norwich - UK), ரமோதயன்(J/ Mahajana College Tellipalai), சமீனா(J/ Mahajana College Tellipalai), ஏனோசியன்(J/ Alaveddy Seenankaladdy Gnanodaya Vidyalayam), யமிசன்(J/ Kokkuvil Hindu Primary School), ரவோன்(Norwich - UK), ஜோஜினா(Norwich - UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2025 நாளை செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 09.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.1010/17, கே.கே.எஸ் வீதி,
(கண்ணன் இசைக்குழு ஒழுங்கை)
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
வசந்தகுமார், ரவிக்குமார் (சசி)
077 238 8083, 077 411 8881,
075 148 0512

(3551,3555)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாணிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2358)
076 825 7716 (ஆகாஸ்)

UK BUSINESS VISITOR VISA
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777



கனடாவில் PR வாய்ப்புக்கள்
CARE GIVER கற்கைநெறி
HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER
G.C.E O/L
50,000/-
NVQ/UK DIPLOMA
CIMS 49A, CHAPPEL LANE JAFFNA 0777068777 (C-2359)





# பதவி வெற்றிடம்

- **உதவி ஆசிரியர்**
  (35 வயதுக்கு மேல், இருபாலாரும்)
- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** (பகல் கடமை)
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)
- **பராமரிப்பு பணியாளர்கள்**
  (சுத்திகரிப்பாளர், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3127 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org